# இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் விழுமியப் போதனை

**A. Paunanthie[1] , J. Rasanayagam[2]**

[1]Kopay Teachers' College, [2]Department of education, University of Jaffna
nanthie@gmail.com, luxmy2001@gmail.com

**ABSTRACT:** தமிழிலக்கிய வகைகளுள் சிறுவர் இலக்கியம் என்பது இன்று முக்கியத்துவம் பெற்றதொன்றாக விளங்குகின்றது. தமிழில் சிறுவர் இலக்கியத்தின் ஆரம்பம் பற்றி அறுதியாகக் கூறமுடியாவிட்டாலும் அவை நாட்டார் பாடல்களோடு தொடர்புடையவையாக அமைந்திருப்பதை தாலாட்டுப்பாடல், விளையாட்டுப் பாடல் போன்றவற்றினூடாக அவதானிக்கலாம். சிறுவர் இலக்கியங்கள் என்ற வகையில் சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைப்பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் நாவல்கள், சிறுவர் நாடகங்கள் போன்றன முக்கியத்துவமுடையன. இலங்கையில் சிறுவர் இலக்கியம் நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. ஏனைய வடிவங்களைவிட சிறுவர் பாடல் ஆக்க முயற்சிகளில் பலர் ஈடுபட்டுள்ளனர். அவர்களது பாடல்களில் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டாலும் பொதுவாக விழுமியப் போதனை என்பது மேலோங்கியிருப்பதைக் காணலாம். அறம், ஒழுக்கம் போன்ற விழுமியம் சார்ந்த விடயங்களைக் குழந்தைகளுக்குப் போதிக்கும் நோக்கத்தை அவை அடிப்படையாகக் கொண்டுள்ளன. சிறுவர் உளவியல், கல்வி பற்றிய ஆய்வுகள் அதிகரித்துள்ள இன்றைய சூழலில், சிறுவர் பாடல்கள் அவர்களின் உளவியல், மொழி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு பாடப்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. செல்லப்பிராணிகள், உறவினர்கள், இயற்கை, விழாக்கள் என பலவிடயங்களை அடிப்படையாகக் கொண்டு பாடப்படுகின்ற சிறுவர் பாடல்களில் பொதுவாக விழுமியப் போதனைகள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். இலங்கைத் தமிழிலக்கியப் பரப்பில் இதுவரை பலர் குழந்தைப் பாடல்களைப் பாடியுள்ளனர். அவற்றில் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இன்று, பாடசாலைகளில் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்ற தமிழ்ப்பாடக் கலைத்திட்டத்திலும் சிறுவர் பாடல்கள் பல இடம்பெற்றிருப்பதை அவதானிக்கலாம். இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் பொதுவாக உண்மை பேசுதல், பெற்றோரை மதித்தல், பெரியோரை மதித்தல், கடவுளை வணங்குதல், தருமம் செய்தல், உயிர்களைப் பாதுகாத்தல், இரக்கம் காட்டுதல் போன்ற விழுமியங்கள் போதிக்கப்பட்டிருப்பதைக் காணலாம் இவ்வாறு விழுமியங்களைப் போதிப்பது சிறுவர்கள் சிந்தனையில் ஆரோக்கியமான அத்திவாரத்தை இடும் என்ற எதிர்பார்ப்போடு இவைபாடப்பட்டிருக்க வேண்டும். அதுமட்டுமின்றி அவ்வாறு விழுமியத்தைப் போதிக்கும் பாடல்களையே ஆசிரியர்களும் பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு விரும்பிக் கற்பிக்கின்றனர் என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயமாகும்.இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்கள் பற்றிய ஆய்வுகள் இடம்பெற்றுள்ளபோதும், அவை பொதுப்படையாகச் சிறுவர் பாடல்களை நோக்கியுள்ளனவேயன்றி விழுமியப் போதனை அணுகுமுறையில் நோக்கப்பட்டதாக அறியப்படவில்லை. இந்நிலையில், இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் விழுமியங்கள் எவ்வாறு போதிக்கப்படுகின்றன என்பதை நோக்குவது அவசியமானதாக அமைகின்றது. இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் போதிக்கப்படுகின்ற விழுமியங்கள் பற்றிப் பகுப்பாய்வு செய்து விவரிக்கும் அடிப்படையில் இந்த ஆய்வானது விவரண முறையிலும் பகுப்பாய்வு முறையிலும் முன்னெடுக்கப்படுகின்றது.

**Keywords:**சிறுவர் பாடல்கள், விழுமியம், போதனை

## 1. ஆய்வு அறிமுகம்:

விழுமியம் என்ற சொல் இன்று கல்விப் புலத்தில் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையை நாம் காணலாம். விழுமியம் என்பதை பொதுவாக அறம், ஒழுக்கம், நெறி என்று கருதுவர். இதனை ஆங்கிலத்தில் values என்கின்றனர். "மனிதரை விலங்கு நிலையிலிருந்து உயர்த்தி மனித நிலைக்கும் பின் தெய்வீக நிலைக்கும் இட்டுச் செல்பவை விழுமியங்கள்." (சோமசுந்தரம், 2010.) "உலகம் முழுக்க அறநெறிகள் பல உள்ளன. நீதிகள் உள்ளன. ஆசாரங்கள் உள்ளன. அவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாகச் சுட்டக்கூடிய சொல்லே விழுமியம். அவை மக்கள் வாழ்ந்து அறிந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் நெறிகள் குறித்த நம்பிக்கை மற்றும் மனக்கட்டுமானமே விழுமியமாகும்." எனத் தமிழ் விக்சனரி கூறுகின்றது. இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் விழுமியக் கருத்துக்கள் எவ்வாறு போதிக்கப்படுகின்றன என்பதை ஆய்வு செய்வது அவசியமாகின்றது. கல்விப்புலத்தில் போதித்தல் என்ற சொல் கற்பித்தல் என்பதற்குச் சமனாகப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, சிறுவர் பாடல்களினூடாக விழுமியக் கருத்துக்கள் போதிக்கப்பட்டுள்ளமை பற்றியதாகவே இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

குழந்தைகள் மீதான பார்வை உலக அரங்கில் பலநிலைகளிலும் முனைப்புப் பெற்றுள்ளது. இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள், இளமையிற் கல்வி சிலையில் எழுத்து, ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? போன்ற தமிழ் மரபுச் சிந்தனைகளினூடாகத் தமிழ்ச் சமூகத்திலும் சிறுவர் மீதான அக்கறை பன்னெடுங்காலமாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தவகையில் சிறுவரது உள்ளத்தை, சிந்தனையைப் பலப்படுத்தக்கூடிய, வளப்படுத்தக்கூடிய விடயங்களை இலக்கியங்களினூடாகப் பதிவுசெய்தனர். தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் சிறுவர்களுக்கான பாடல்களை ஆக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டுள்ளனர். இந்த அடிப்படிடையில் இலங்கையில் நவாலியூர் சோமசுந்தரப் புலவர், வித்துவான் க.வேந்தனார், பண்டிதர் க.வீரகத்தி, ஆடலிறை, சுபைர், சாரணா கையூம் போன்ற பலரைப் பட்டியற்படுத்தலாம்.

உதிரிகளாகவும், தொகுதிகளாகவும் இலங்கையில் சிறுவர்பாடல்கள் பல வெளிவந்துள்ளன. இலங்கையில் தொகுதியாக வெளிவந்த சிறுவர்பாடல் என்ற அடிப்படையில், 1918 இல் திரு சி.வைத்தியநாதர் என்பவரால் வெளியிடப்பட்ட குழந்தைப்பாடல் தொகுதியான ''தமிழ்ப் பாலபோதினி'' என்பதே காலத்தால் முந்தியதாக அறியப்படுகின்றது. ஆனாலும், சிறுவர் பாடலுக்குரிய பண்புகளோடு வெளிவந்த தொகுதி என்ற அடிப்படையில் நோக்கும்போது 1938 இல், க.ச.அருணந்தி என்பவரால் தொகுத்து வெளியிடப்பட்ட ''பிள்ளைப்பாட்டு'' முதன்மையானது (யோகராசா, 2011.).

''பிள்ளைப்பாட்டு'' என்ற தொகுதியின் முன்னுரையில் க.ச.அருணந்தி அவர்கள், சிறுவர்பாடல்களின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக விழுமியப் போதனை அமைகின்றது என்பதை எமக்கு வலியுறுத்தியுள்ளார். எனவே, அது பற்றி ஆய்வு செய்யப்படுவது அவசியமாகின்றது.

இலங்கையில் வெளிவந்துள்ள சிறுவர்பாடல்களின் பாடுபொருள் பற்றி நோக்குகின்றபோது அவை பொதுவாக, செல்லப்பிராணிகள், குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், இயற்கை அழகு, விளையாட்டுப் பொருட்கள், விளையாட்டுக்கள், விழாக்கள், நகைச்சுவை சார்ந்த விடயங்களைப்பற்றியனவாகக் காணப்படுகின்றன. மேற்போந்த விடயங்களைப் பாடுகின்றபோது பெரும்பாலும் விழுமியங்களைப் போதிக்க முற்படுவதைப் பல இடங்களில் அவதானிக்க முடிகின்றது.

**2. ஆய்வு முறையியல்:**

ஆய்வு நோக்கம் மற்றும் குறிக்கோள்களுக்கு ஏற்ப இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் விழுமியப் போதனை பற்றிய மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக இந்த ஆய்வானது விவரண ஆய்வாகவும் பகுப்பாய்வாகவும் முன்னெடுக்கப்படுகின்றது. மேற்படி சிறுவர் பாடல்களில் இடம்பெறும் விவரணங்களினூடாகப் போதிக்கப்படும் பொதுவான விழுமியங்களை இனங்கண்டு கொள்ளும் அடிப்படையில் விவரண ஆய்வுமுறை பின்பற்றப்படுகின்றது. பகுப்பாய்வு முறையில், விவரணங்களினூடாகப் பெறப்படும் தகவல்களை ஒழுங்கமைத்து, பகுத்து, தொகுத்து குறிப்பான விடயங்கள் எவை என்பதை நோக்குவதும் அவை பற்றி வியாக்கியானம் செய்வதும் மேற்கொள்ளப்படுகின்றது.

**3. ஆய்வுப் பெறுபேறுகளும் வியாக்கியானங்களும்:**

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, திருக்குறள் போன்ற அற இலக்கியங்களின் கருத்துக்கள் ஆழ வேரூன்றியுள்ள சமூகத்தில் சிறுவர் பாடல்களைப் பாடுகின்றபோதும் அச்சிந்தனைகள் மேலோங்கி நிற்பதைக் காணலாம். குடும்ப உறுப்பினர்களின் அன்பையும் மதிப்பையும் பாடுதல், சமூகப் பெரியோரைப் பாடுதல், இறைவனைப் பணிதல், உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், சுத்தமாக வாழ்தல், சூழலை நேசித்தல், உண்மை பேசுதல், அறம் செய்தல், நாட்டுப் பற்று, மொழிப் பற்று எனப் பல விழுமியப் போதனைகள் இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் இடம்பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

**4. பெற்றோரையும் உறவினரையும் மதித்தல்:**

குழந்தைகள் முதலில் சந்திக்கின்ற சமூகம் குடும்பமாகும். அம்மா, அப்பா, சகோதரர்கள், பாட்டி, தாத்தா என, குடும்பத்தில் உள்ளவர்கள் பலர். அவர்கள் மதிக்கப்பட வேண்டியர்கள், அன்புடையவர்கள், பிள்ளைகளின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுபவர்கள் போன்ற விழுமியம் சார்ந்த பல சிந்தனைகள் சிறுவர் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. அம்மா, அப்பா, பாட்டி,

தாத்தா ஆகியவர்களைச் சிறப்பித்துப்பாடாத சிறுவர் பாடலாசிரியர்கள் இல்லை என்றே கூறலாம். அந்தவகையில் வேந்தனாரின் 'அம்மாவின் அன்பு' என்ற பாடல் சிறப்பிற்குரியது. "காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா…" என்று தொடங்குகின்றது அந்தப்பாடல். ஆடலிறையின் 'அம்மா எங்கள் தெய்வம்' என்ற பாடலில் தாயைத் தெய்வமாகப் போற்றுகின்றார்.

"பத்து மாதம் என்னைச் சுமந்து
பெற்றெ டுத்த அம்மா
சொத்தாய் என்னை என்னை என்றும் காக்கும்
தெய்வம் எங்கள் அம்மா

எனக்கு நோய்கள் ஏதும் வந்தால்
தானே மருந்து குடிப்பாள்
தனக்கு வந்த வருத்த மாகத்
தானே மெலிந்து நிற்பாள்"

என்று தாயின் தன்னிகரற்ற அன்பை அவர் போதிக்கின்றார். அறிவியல் ரீதியாகப் பிள்ளைக்கு நோய் வந்தால் தாய் மருந்து குடித்து எந்தப் பயனும் இல்லை. எனினும், தாயின் அன்பை வெளிப்படுத்தும் ஒரு உத்தியாக இது சிறப்படைகின்றது. அம்மா பற்றி சிறுவர் பாடலாசிரியர்கள் பலர் பாடியுள்ளனர். இது வகை மாதிரிக்கான பாடலடிகள் ஆகும். அதேபோல, தந்தையைத் தெய்வமாகப் போற்றிப் போதிக்கும் பாடல்களும் உள்ளன. ஆடலிறை அவர்களின் 'இனிய அப்பா' என்ற பாடல் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

"என்னைத் தம்பி என்று சொல்லி
அழைக்கும் இனிய அப்பா
கண்ணைப் போல என்றும் என்னைக்
காக்கும் எந்தன் அப்பா

தோளில் என்னைத் தூக்கி வைத்துக்
குதிரை போல நடிப்பார்
நாளும் எனக்குப் பாடம் சொல்லி
நன்மை செய்யும் அப்பா

குற்றம் செய்தால் உறுக்கி என்னைத்
திருந்தச் செய்யும் அப்பா
நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த
எனக்காய் உழைக்கும் அப்பா"

கதைகளையும், ஒழுக்கத்தையும் சொல்லிக் கொடுப்பவளாகப் பாட்டியைப் பாடுதல், அறிவுரைகளைச் சொல்லிக் கொடுக்கும் அன்பு மிக்கவராக தாத்தாவைப் பாடுதல், சகோதரர்கள் ஒற்றுமையோடு சேர்ந்து ஆடிப்பாடி, விளையாடி மகிழ்வதாகப் பாடுதல், ஆசிரியரைத் தெய்வமாகப் போற்றிப் பாடுதல் எனப் பல்வேறு உறவினர்களையும் பற்றிய போதனைகள் சிறுவர் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

**5. பெரியோரை மதித்துப் பின்பற்றல்:**

சமூகத்தில் வாழ்ந்த பெரியவர்களை முன்மாதிரிகளாகப் போற்றி அவர்களின் சிறந்த பண்புகளைப் பிள்ளைகளுக்குப் போதிக்கும் அடிப்படையில் அமைந்த சிறுவர் பாடல்கள் பலவற்றையும் இலங்கைத் தமிழ் சிறுவர் இலக்கியங்களில் காணலாம். குறிப்பாக அறம் மற்றும் ஒழுக்கம் பற்றிப் பாடிய ஔவைப்பாட்டி, வள்ளுவர், பாரதியார், அற வழியில் வாழ்ந்த காந்தித் தாத்தா, அன்னை தெரேசா, ஆறுமுக நாவலர், வங்கம் தந்த சிங்கம் சுவாமி விவேகானந்தர் போன்றவர்களையும் சிறந்த குழந்தைப் பாடல்களைப் பாடிய நவாலியூர் சோமசுந்தரப் புலவர் மற்றும் கவிமணி தேசிகவிநாயம்பிள்ளை போன்றவர்களையும் சிறப்பித்துப் பாடியுள்ளனர். அவர்களது அறவாழ்க்கை, ஒழுக்க நெறி, சமூகப்பணி போன்றவற்றினூடாகப் பிள்ளைகளிடத்திலும் விழுமியங்களைப் போதிக்க முடியும் என்ற அடிப்படையில் அவை

பாடப்பட்டுள்ளமை புலனாகின்றது. பண்டிதர் க.வீரகத்தி அவர்களின் 'விடுதலை கண்ட வீரர்கள்' என்ற பாடலில் காந்தியைப் போற்றுகின்றமை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

"சத்தியம் அன்பு அகிம்சையொளி – உயர்
சன்மார்க்க சீலம் நுண்மதியை
விந்தையில் வல்ல அயன்குழைத்தான் - அது
வீழ்ந்தது "பூ"வினில் "காந்தி" என்றார்"
என்று அந்தப் பாடல் தொடர்ந்து செல்கின்றது.

**6. கடவுளரைப் பணிதலும் சமய ஒற்றுமையும்:**
சிறுவர் பாடலாசிரியகள் கடவுளரைப் பாடுவதனூடாக பிள்ளைகளிடத்தில் இறை நம்பிக்கையையும் சமயப் பற்றையும் போதிக்க முற்பட்டுள்ளமையைக் காணலாம். சிலர் இறைவன் என்று பொதுவாகப் பாடுகின்ற அதேவேளை வேறு சிலர் தத்தமது சமய தெய்வங்களைப் பாடுகின்றனர். சிவன், சக்தி, அல்லா, இயேசு கிறிஸ்து, புத்தர் ஆகிய தெய்வங்கள் பற்றிய பாடல்கள் அதிகம் இடம்பெற்றுள்ள. எல்லாத் தெய்வங்களும் ஒன்றே என்ற போதனையை ஊட்டும் பாடல்களும் உள்ளன. ஆடலிறையின் 'இறைவன் செயல் என்ற பாடல் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும்.

"எல்லை இல்லா இச்சக்தி
ஏற்கும் பெயர்கள் மிகப்பலவாம்
அல்லா என்று சிலர்சொல்வார்
ஆதி சிவனே அவனென்பார்

ஏசு தேவன் செயலென்பார்
எண்ணிற் புத்தன் அருளென்பார்
நேசங் கொண்ட ஓரிறைவன்
நிகழ்த்தும் விந்தை இவையென்போம்"

சாரணா கையூம் என்பருடைய 'மாமறை' என்னும் பாடலிலும் இறைவன் ஒருவன் என்ற தத்துவம் போதிக்கப்படுகின்றது.

"ஒருவன் இறைவனென்று – உலகம்
ஓதிக் களித்திடவே
கருணை மழை பொழிவாய் - இறைவா
காத்து அருள் புரிவாய்"

இவ்வாறான சமயப் பொறை சார்ந்த விழுமியங்கள் சிறுவர் பாடல்களினூடாகப் போதிக்கப்படுகின்போது முரண்பாடுகளற்ற சமூகத்தை தரிசிக்க முடியும்.

**7. பிற உயிர்களை நேசித்தல்:**
உயிர்களிடத்தல் அன்பு வேண்டும் என்ற அடிப்படையிலமைந்த பல்வேறு பாடல்களையும் இலங்கைத் தமிழ் சிறுவர் பாடல்களில் காணலாம். பிள்ளைகளின் உலகத்தோடு தொடர்புபடுத்தி அவர்கள் விரும்பும், நேசிக்கும், காணும் விலங்குகள், பறவைகளின் செயற்பாடுகளினூடாகப் பல்வேறு விழுமியக் கருத்துக்களைப் போதிக்க முற்படுகின்றனர். பண்டிதர் க.வீரகத்தி அவர்களின் 'வண்ணாத்திப் பூச்சி' என்ற பாடலில் விழுமியத்தைப் போதிப்பதை வெளிப்படையாக நாம் உணர்ந்துகொள்ள முடிகின்றது.

"பாயுமதைப் பிடித்தால்
பசைபிடிக்கும் கையில்
மாயும்அதன் அழகு
மக்காள்அது பாவம்"

என நிறைவு பெறுகின்றது அந்தப்பாடல். அவருடைய'தும்பி' என்ற பாடலில்,

"தும்பி களைப் பிடித்துத்
துனபு றுத்தல் பாவம்
தம்பி அது நல்ல
சாது வான பூச்சி"

என்று பாடப்பட்டுள்ளது. அதிகமாகன சிறுவர் பாடல்களின் இறுதியில் இவ்வாறான போதனைகள் இடம்பெறுவதை அவதானிக்கலாம். ஆடலிறையின் 'பட்டுப்பூச்சி', யசோதா பாஸ்கரனின் 'உயர்வு காணுவோம்','எறும்பு' போன்ற பாடல்களையும் இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். ஏமாற்றக்கூடாது, பொய்சொல்லக் கூடாது, பெரியோர் சொல்லைத் தட்டக் கூடாது, மூடக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது போன்ற விழுமியக் கருத்துக்களையும் சிறுவர் பாடல்களினூடாகப் பாடியுள்ளனர். கல்வயல் வே. குமாரசாமி அவர்களின் 'சிரிப்பு' என்ற பாடலில் மூடக்கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்ற போதனை முன்வைக்கப்படுகின்றது.

"அரிசிக் காகம் கரைகிறது
ஆரோ
வரப்போகினம் என்று
பெரிதாய் அம்மா
சொல்லுகிறா
பெரியண்ணாவோ ஓடிப்போய்
தெருவைப் பார்த்துக்
காணாமல்
திரும்பிவர நாம் சிரிக்கின்றோம்"

என்று அந்தப் பாடல் தொடர்கின்றது. இதே கருத்தைப் பாடுவதாக, ஆடலிறையின் 'காகம் கரைந்தது' என்னும் பாடலிலும் தரிசிக்கலாம்.

**8. சூழல் பாதுகாப்பும் சுகவாழ்வும்:**

சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்; வளங்களைப் பேண வேண்டும்; மரங்கள் நட வேண்டும்; மழைவளம் பெருக்க வேண்டும்; வீட்டுத் தோட்டம் நாட்டி சத்துணவுகளை உண்ண வேண்டும் போன்ற விடயங்களைப் போதிக்கின்ற பல பாடல்களும் உள்ளன. சு.அடைக்கலன் என்பவரது 'சுகவாழ்வின் அவசியம்' என்ற பாடல் அந்தவகையில் குறிப்பிடத்தக்கது.

"சுத்தம் பேணுவோம், சுக வாழ்வு காணுவோம்
நித்தம் நமது சமூகத்தின் நலனுக்காய்ச்
சுத்தம் பேணுவோம் சுகவாழ்வு காணவோம்"
என்று அந்தப் பாடல் ஆரம்பிக்கின்றது.

பண்டிதர் க.வீரகத்தி அவர்களின் 'வலியும் வனப்பும்' என்ற பாடல் சுத்தமாக வாழ்தல் பற்றியே போதிக்கின்றது. பன்மொழிப் புலவர் த.கனகரத்தினத்தின்,'மரம் நாட்டுவோம்','சுத்தம் சுகம் தரும்','சூழல் மாசுபடுமோ?' மற்றும் கவிஞர் ச.துரைசிங்கத்தின்,'சூழல் சுத்தம் பேணுவோம்','மரம் நடுவோம்' போன்ற பாடல்களையும் வகைமாதிரிகளாகக் கூறலாம்.

"சுற்றி இருப்பது சூழல்
சுகத்தைத் தருவதும் சூழல்
சற்றும் கவனம் இன்றேல்
சாவும் கேடும் நேரும்"
என்று பன்மொழிப் புலவர் த.கனகரத்தினமும்,
"மரம் நடுவோம் மரம் நடுவோம்
மகிழ்வுடனே வாருங்கள்
மரத்தின் அருமை தெரிந்து நாமும்
மரம் நடுவோம் வாருங்கள்"

என்று கவிஞர் த.துரைசிங்கமும் பாடுயுள்ளமை எடுத்துக்காட்டுக்களாக முன்வைக்கப்படுகின்றன. அதேபோல, வேலணையூர் சுரேஷ் அவர்களின் 'வீட்டுத் தோட்டம்' என்ற பாடலும் முக்கியத்துவமுடையது.

**9. வீதி ஒழுங்குகளைப் போதித்தல்:**

விபத்து, வீதி ஒழுங்கு போன்ற விடயங்களிலும் பிள்ளைகளிடம் விழுமியப் பண்பை ஏற்படுத்தும் வகையில் சிறுவர் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. பன்மொழிப் புலவர் த.கனகரத்தினத்தின் 'வீதி ஒழுங்கு' என்ற பாடலில்,

"பாதை ஓரம் பார்த்து நடப்பீர் - வலமாய்
காதும் கண்ணும் வைப்பீர்! கவனம்!!

மோதும் வண்டிகள் தெருவில் ஓடும் - அவை
காதில் 'பூம்பூம்' என்றே இரையும்

வலமும் இடமும் மாறிப் பார்த்து - நீர்
நலமாய்த் தெருவின் நடுவைக் கடப்பீர்"

என்று பாடுகின்றமை குறிப்பிடத்தக்கது. அவரது 'சல் சல் வண்டி' எனும் பாடலிலும் வீதி ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற விழுமியம் போதிக்கப்படுகின்றது.

கவிஞர் த.துரைசிங்கத்தின் 'விபத்தைப் பெருக்காதீர்' என்ற பாடல் பின்வருமாறு அமைகின்றது.

"போதையில் வாகனம் ஓட்டாதீர்
போவோர் வருவோரை மோதாதீர்
நாளும் விபத்தைப் பெருக்காதீர்
நலமே செலுத்தப் பழகிடுவீர்"

இங்கு விபத்தைத் தடுத்தல் பற்றிய விழுமியப் போதனை பாடப்பட்டுள்ள போதிலும், இது சிறுவர்களுக்காகப் பாடப்பட்டவையாகக் கொள்ள முடியாது. போதையில் வாகனம் ஓட்டுதல் பற்றி, சிறுவர் பாடல்களில் பாடுவது பொருத்தமற்றதாகவே அமைந்துள்ளது. எனவே, சிறுவர் பாடல்களைப் பாடுகின்றபோது பல்வேறு விடயங்களிலும் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும்.

**10. நாட்டுப் பற்று:**

சிறுவர் பாடல்களில் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இன ஒற்றுமை போன்ற விழுமியங்களும் செறிவாகப் பாடப்பட்டுள்ளன. நாட்டுப்பற்றினைச் சிறுவர்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு நாட்டின் அழகு, வளம், ஒன்றுபட்ட வாழ்வு எனப் பலவற்றையும் பாடல்களின் உள்ளடக்கங்களாகக் கொண்டனர். அகளங்கனின் 'பாடுவோம் ஆடுவோம்' என்ற பாடல், வேலணையூர் சுரேஷின் 'எங்கள் நாடு' என்ற பாடல், கவிஞர் த.துரைசிங்கத்தின் 'நமது நாடு','நாட்டுப் பற்று வேண்டும்', போன்ற பாடல்கள் இந்தவகையில் முக்கியத்துவமுடையன. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகப் பண்டிதர் க.வீரகத்தியின் 'ஈழம் எங்கள் நாடு' என்ற பாடலைக் கூறலாம்.

"போதி சத்துவரின் சேதி – புகழ்
பொலியும் சைவநெறி நீதி!
வாதை தீர்க்குமதம் இஸ்லாம் - மன
வளம் வளர்க்கும்தாய் நாடு
சிங்கள(வ)ர் தமிழர்முஸ் லீம்கள் - ஒன்று
சேர்ந்து பொதுவுடைமை கண்டு
எங்கள் தாய்நாடு என்றே – தம்
இதயம் பூரிக்கும் ஈழம்!"

வித்துவான் க.வேந்தனாரின் 'நாட்டில் அன்பு வேண்டும்' என்ற பாடலில் பொதுவுடைமைச் சிந்தனை கொண்ட நாட்டை உருவாக்க வேண்டும் என்ற போதனையை அவர் முன்வைக்கின்றார்.

"பொருளும் நிலமும் எவர்க்கும்
பொதுவாய் இருத்தல் வேண்டும்
அருளும் தொண்டு உலகை
ஆளப் பார்க்க வேண்டும்"

என்ற பாடலடிகளில் அதனைக் கண்டுகொள்ளலாம்.

**11. தமிழ் மொழியின் சிறப்பு:**

இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் தமிழ் மொழியின் சிறப்பும் தொன்மையும் இனிமையும் தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்களின் நயமும் தமிழ் மொழிக்குப் பெரியோர் ஆற்றிய பங்களிப்பும் போதிக்கப்படுவதோடு தமிழ் விரும்பிக் கற்க வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. இவற்றினால் சிறுவர்களிடத்தில் மொழிப்பற்று ஏற்படும் என்று அவர்கள் கருதியுள்ளமை புலனாகின்றது. வேலணையூர் சுரேஷ் அவர்களின் 'தமிழ் வணக்கம்' என்ற பாடல், கவிஞர் த.துரைசிங்கம் அவர்களின் 'தெரிந்துகொள்', பண்டிதர் க.வீரகத்தி அவர்களின் 'தமிழ்' போன்ற பாடல்களை இதற்கு ஆதாரங்களாகக் கொள்ளலாம். 'தமிழ்' என்ற பாடலில் தாய் மொழியை நேசிக்க வேண்டும் என்ற விழுமியச் சிந்தனை எவ்வாறு வலியுறுத்தப்படுகின்றது என்பதற்குக் கீழ்வரும் பாடலடிகள் சான்றாக அமையும்.

"அம்மா என்று சொல்லி நாம்
ஆரம்பித்த தமிழ் மொழி
அம்மா தந்த பாலுடன்
அளைந்து வந்த தமிழ்மொழி
அம்மா தா லாட்ட
அமிழ்தம் ஊறும் தமிழ்மொழி
அம்மா அப்பா எனக்குமே
அன்னையான தமிழ்மொழி"

**12. அன்றாட வாழ்வில் விழுமியப் போதனை:**

அன்றாட வாழ்க்கைக் கடமைகளை நிறைவேற்றுவதனூடாக, சமூகத்தினால் மதிக்கப்படும் நல்ல பிள்ளைகளாக வாழலாம் என்ற அடிப்படையில் பல்வேறு விழுமியக் கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. பள்ளி சென்று பாடம் கற்க வேண்டும்; நல்ல நூல்களை நாளும் வாசித்துப் பயன்பெற வேண்டும்; வீட்டுப் பாடங்களை ஒழுங்காகக் கற்க வேண்டும்; காலையில் எழுந்து கடமைகளை முடித்து கடவுளை வணங்க வேண்டும்; பெற்றோர் சொற்படி நடக்க வேண்டும்; ஒழுக்கம் பேண வேண்டும்; உண்மை பேச வேண்டும் போன்ற பல்வேறு விழுமியக் கருத்துக்களைத் தமது பாடல்களினூடாகப் போதித்துள்ளனர். பண்டிதர் க. வீரகத்தி 'ஆத்தி சூடி' என்ற பாடலில் இவ்வாறான ஒழுக்க விழுமியங்களையே போதிக்கின்றார். நாளாந்த வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய இவ்வாறான விழுமியங்களைப் போதிக்கும் பல பாடல்கள் உள்ளன. ஆய்வுக் கட்டுரையின் விரிவஞ்சி இரண்டு பாடல்களை மட்டும் இங்கு ஆதாரமாகக் கொடுக்கப்படுகின்றன. ஆடலிறையின் 'பாலகனே கேள்' என்ற பாடல் நேரடியாகப் போதனை உத்தியைக் கையாண்டு பாடப்பட்டுள்ளது.

"பள்ளியிற் கல்வி பயின்றிடச் சென்றிடும்
பாலக னேசற்று நின்றிடுவாய்
உள்ளம் உணர்ந்ததைச் சொல்ல நினைத்தனன்
ஊன்றிக் கவனித் தொழுகிடுவாய்

நல்லவன் என்றுனை நாடு புகழ்ந்திட
நல்லன செய்திடு கண்மணியே

கல்வியைக் கண்ணெனப் போற்றிய மாந்தரின்
கால்வழி நாமென் றுணர்ந்திடுவாய்"

அதேபோல கவிஞர் த.துரைசிங்கத்தின் 'பழகுவோம்' என்ற பாடலிலும் பல விழுமியங்கள் போதிக்கப்படுகின்றன.

"உண்மை என்றும் பேசுவோம
உயர்வு காண முந்துவோம்
கள்ளம் கபடம் இன்றியே
கவலை யின்றி வாழுவோம்"
என்று தொடர்ந்து செல்கின்றது அந்தப் பாடல்

**13. ஆய்வு முடிவுகள்:**

- இலங்கைத் தமழிச் சிறுவர் பாடல்களில் விழுமியப் போதனைகள் பல்வேறு வகையில் பாடப்பட்டுள்ளன.
- அம்மா, அப்பா, பாட்டி, தாத்தா, மாமா, சகோதரங்கள் போன்ற குடும்ப உறவுகளை மதித்துப் போற்ற வேண்டும் என்ற அடிப்படையில் பாடப்பட்ட பல பாடல்கள் உள்ளன.
- இறைவனைப் பணிய வேண்டும், இறைவன் ஒருவனே, எல்லா மதங்களும் அடிப்படையில் ஒன்றே போன்ற விழுமியக் கருத்துக்கள் போதிக்கப்பட்டுள்ளன.
- சமூகத்தில் பெருமையோடும் மதிப்போடும் வாழ்ந்த பெரியவர்களை மதித்து அவர்களின் வாழ்க்கையைப் பின்பற்றி உயரவேண்டும் என்ற போதனை வலியுறுத்தப்பட்டுள்ளது.
- சுத்தம், சுகாதாரம், வளங்களைப் பேணுதல், இயற்கையைப் பாதுகாத்தல் போன்ற விழுமியங்கள் போதிக்கப்பட்டுள்ளன.
- மற்றைய உயிர்களை வதைக்காது நேசித்து வாழவேண்டும் என்ற போதனை முன்வைக்கப்பட்டுள்ளது.
- நாட்டுப் பற்று, தாய்மொழிப் பற்று என்பவற்றைச் சிறுவர்களிடம் ஏற்படுத்துவதற்கான உத்திகளாக விழுமியங்கள் போதிக்கப்பட்டுள்ளன.
- நாளாந்த வாழ்வில் ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவதால் வாழ்வில் உயரலாம் என்ற விழுமியக் கருத்து பல இடங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளன.
- சில இடங்களில் பிரச்சாரத் தன்மையோடு விழுமியங்கள் பாடப்பட்டுள்ளமையை நோக்கலாம்.

**14. முடிவுரை:**

இலங்கையில் தமிழ்ச் சிறுவர் பாடல்கள் நீண்டகால வரலாற்றைக் கொண்டதாக அமைந்துள்ளன. தமிழ்ச் சமூகத்தில் ஒழுக்கம், விழுமியம், அறம் சார்ந்த விடயங்கள் பலநிலைகளிலும் முக்கிய விடயமாகப் போதிக்கப்படுவதை அவதானிக்கலாம். குறிப்பாக தமிழிலக்கியங்கள் அறத்திற்கு முதன்மையளித்துள்ளன. அந்தவகையில் சிறுவர் இலக்கியங்களிலும் அறக் கருத்துக்கள் முதன்மை பெற்றிருப்பதை அவதானிக்கலாம். சிறுவர்களுக்குப் போதிக்கின்றபோது விழுமியம் சார்ந்த விடயங்கள் முதன்மை பெற்றிருப்பதைத் திண்ணைக் கல்வி முறையிலிருந்தே அவதானிக்க முடிகின்றது. ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற இலக்கியங்கள் இப்போதும் சிறுவர்களுக்கான கலைத்திட்டத்தில் முதன்மைபெற்றுள்ளன. இப்பின்னணியில் "ஓடி விளையாடு பாப்பா..." என்று பாப்பா பாடல் பாடிய பாரதியாரும் சிறுவர்களுக்கான பாடல் மூலம் விழுமியத்தைப் போதிக்க முற்பட்டிருப்பதைக் காணலாம்.

ஈழத்தின் ஆரம்ப கால சிறுவர் பாடல் தொகுப்பு முயற்சியில் ஈடுபட்ட க.ச.அருணந்தி என்பவர் கூட சிறுவர் பாடல்களில் விழுமியக் கருத்துக்கள் இடம்பெற வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளமையைக் காணலாம். இதற்குப் புறம்பாக வெறும் சொற்கோர்வைகளைச் சிறுவர் பாடல் என்ற பெயரோடு வெளியிடும் சம்பவங்களையும் காணமுடிகின்றது. ஈழத்தில் சிறுவர் பாடலாசிரியர்களான நவாலியூர் சோமசுந்தரப் புலவர், வித்துவான் க. வேந்தனார், பண்டிதர் க. வீரகத்தி, ஆடலிறை கவிஞர் அம்பி, பண்டிதர் க. சச்சிதானந்தன் போன்ற பலரது பாடல்களிலும் விழுமியங்கள் போதிக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. கல்வியினூடாக விழுமியம்

கற்பிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் பாடசாலை மற்றும் முன்பள்ளிச் சிறுவர்களுக்கான தமிழ்ப் பாடக்கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறுவர் பாடல்களிலும் விழுமியப் போதனைகள் இடம்பெற்றிருப்பதை அவதானிக்கலாம். எனவே, தொகுத்து நோக்கும்போது இலங்கைச் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் விழுமியப் போதனைகள் பல இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

**15. உசாத்துணைகள்:**


ஆடலிறை. (2005), குழந்தைப் பாடல்கள். யாழ் இலக்கிய வட்டம்: யாழ்ப்பாணம்.

கைலாசபதி, க. (2001), தமிழில் குழந்தை இலக்கியம். இலக்கியச் சிந்தனைகளகுமரன் புத்தக இல்லம்: கொழும்பு. ப.51-55.

கைலாசபதி, க. (2002), தமிழில் குழந்தைக் கவிதைகள். நவீன இலக்கியத்தின் அடிப்படைகள். குமரன் புத்தக இல்லம்: கொழும்பு. ப.41-60.
சந்திரமதி, வே. (2011), சிறுவர் இலக்கியங்களின் இன்றைய போக்கு. சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டு கட்டுரைக்கோவை. ப.202-204.

செந்திநாதன், க. (தொகுப்பாசிரியர்) (1979), ஈழத்துக் குழந்தைப் பாடல்கள். அமரர் வயிரவப்பிள்ளை கந்தையா குடும்பத்தினர். யாழ்ப்பாணம்.

சோமசுந்தரப்புலவர், க. (2006), செந்தமிழ் அமுதம். பூபாலசிங்கம் புத்தகசாலை: கொழும்பு.

சோமசுந்தரம், கு. (2010), மனித வாழ்க்கை விழுமியங்கள். ரஜி வெளியீடு: கொழும்பு.

துரைசிங்கம், த. ஈழத்தில் சிறுவர் இலக்கியம் - ஒரு நோக்கு. சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டு கட்டுரைக்கோவை. ப.252-265.

யோகராசா, செ. (2011), தமிழில் சிறுவர் இலக்கியம்: தோற்றமும் ஈழமும். சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டு சிறப்பு மலர். ப.9-11.

வீரகத்தி, க. (1971), தங்கக் கடையல். எம்.டி.குணசேனா அன்ட் கம்பனி லிமிடெட்: கொழும்பு.

ஜெயலட்சுமி, இ. (2004), சமுதாயக் கல்வி. மகாவீரர் அச்சகம்: தஞ்சாவூர்.

ஹஸன், எம்.எச்.எம். (2006), முன்பள்ளிக் கல்வி கலைத்திட்டமும் வழிகாட்டலும். இஸ்லாமிக் புக் ஹவுஸ்: கொழும்பு.